# திருக்குறள் கல்வெட்டுகள்

## நோக்கம்

முக்காலத்திற்குமேற்ற முதன்மைக்கருத்துக்களை தொடர்ந்து வழங்கி, அறிவுப்பெட்டகமாக இருந்து, உலகப் பெரும் தீமைகளையெல்லாம் தீர்க்கவல்லதுமான மாமருந்தாய்த் திகழ்கின்றது நமது திருக்குறள். திருக்குறள் வேறு தமிழ் வேறு அல்ல. திருக்குறளைப் போற்றுவதும் தமிழைப் போற்றுவதும் ஒன்றுதான்.இந்த வகையில் 1330 குறள்களையும் உரிய விளக்கங்களுடன் கல்வெட்டுகளாகமலையில் பொறித்து, பல ஆயிரம் ஆண்டுகளானாலும், பல லட்சம் ஆண்டுகளானாலும் தமிழ் எப்படி சிறந்து விளங்கியது? தமிழர்கள் எப்படி சிறந்தோங்கி வாழ்ந்திருந்தார்கள் என்பதை உலகிற்கு பறைசாற்றும் விதமாக இவ்வுலகிற்கு விட்டுச் செல்லவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்திறகாக..., 1330 குறள்களையும் உரிய விளக்கங்களுடன் கல்வெட்டுக்களாக மலையில் பொறிக்க வேண்டும் என்று திட்டமிட்டு,குறள் மலை உருவாக்கப்பட்ட பின் திருக்குறள் ஆராய்ச்சிக் கூடம் நிறுவியும், விழா மண்டபங்களை உருவாக்கியும், வருடத்தின் 365 நாட்களிலும் தொடர்ந்து திருக்குறள் விழாக்கள் தமிழ் விழாக்கள் இங்கு நடத்தப்படவேண்டும் எனதமிழ்நாடு அரசுக்கு குறள் மலைச்சங்கம் சார்பாக பல ஆண்டுகளாக மனு அளித்து வந்தோம்.

## குறள் மலை ஆய்வு

திருச்சி உச்சிப் பிள்ளையார் கொவில் மலை, பழநி மலை, பவள மலை, பச்சை மலை, சிவன் மலை, ஓதி மலை போன்ற பல மலைகளை குறள் மலைச் சங்கம் ஆய்வு நடத்தியது.திருச்சி உச்சிப் பிள்ளையார் கொவில் மலை செங்குத்தாக இருக்கிறது என்றும் இங்கு கல்வெட்டுக்கள் அமைப்பது இயலாதது என்றும் சிற்பிகள் கூறிவிட்டார்கள். தொடர்ந்து பழநி மலை, பவள மலை, பச்சை மலை, சிவன் மலை, ஓதி மலை போன்ற பல மலைகள் மண் திட்டுக்களாலும், மரம் செடி கொடிகளாலும் சூழப்பட்டிருப்பதால் கல்வெட்டுக்கள் அமைப்பது சாத்தியமில்லாதது என்றும் சிற்பிகள் கூறிவிட்டார்கள். இறுதியாக ஈரோடு மாவட்டம் மலையப்பாளையத்தில்

அமைந்துள்ள மலை ஆய்வு செய்யப்பட்டது.இந்த மலை ஒரே பாறையாலானதாகவும், வட்ட வடிவத்திலும், சுமார் 100 அடி உயரமே உடையதாகவும், 20.5 ஏக்கர் பரப்பு கொண்டதாகவும் அமைந்துள்ளது.மலை உச்சியில் தமிழ்க்கடவுள் முருகன் ஆலயம் உள்ளது. இந்த ஆலயம் 800 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது என்றும், இந்த ஆலயத்தின் சுற்றுச் சுவர்கள், பிரகாரங்கள், படிக்கட்டுகள், வாயில்கள், மூலவர் உட்பட, பயன்படுத்தப்பட்டிருக்கும் அனைத்துக் கற்களுமே இதே மலையிலிருந்து வெட்டியெடுக்கப்பட்டவை என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள்.



இவ்வளவு ஸ்திரத்தன்மை உடைய பாறையைக் கொண்ட மலையாக இந்த மலை இருப்பதால், இந்த மலையே குறள் பதிக்க ஏற்ற இடம் என்று முடிவு செய்து, கல்வெட்டுக்கள் பதிக்க அரசுக்கு தொடர்ந்து மனுக்கள் செய்தோம்.

இது சம்பந்தமாக மேனாள் குடியரசுத்தலைவர் திரு.ஏ.பி.ஜே.அப்துல்கலாம், மேனாள் உச்சநீதிமன்ற நீதியரசர் திரு.சதாசிவம் உட்பட பலருடனும் கலந்தாய்வு நடத்தப்பட்டது.




அரசு கவனமுடன் பரிசீலித்து, அரசு அதிகாரிகளைக் கொண்டு மலையை ஆய்வு செய்து, எமது கோரிக்கை ஏற்றுக் கொள்ளப் பட்டதாகவும், குறள் கல்வெட்டுக்கள் உருவாக்க அரசு ஆவண செய்யும் என்றும்,

இந்த இடம் சுற்றுலாத்தலமாக உருவாக்கப்படும் என்றும், இது அரசின் கொள்கை முடிவு என்றும் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக ஒப்புதல் கடிதம் எமக்கு வழங்கியுள்ளார்கள்.



திருக்குறள்களைக் கல்வெட்டுக்களாக்கும் அரிய வரலாற்றுச்சிறப்புமிக்க பணிகளுக்காக மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற்கொள்கிறார். அருகில் குறள் மலைச்சங்கத் தலைவர் திரு பா.ரவிக்குமார் அவர்கள்.

## மாதிரிக் கல்வெட்டு



கடந்த 2013 சனவரி மாதம் இந்த மலையிலே மாதிரிக்கல்வெட்டுக்களை, மாமல்லபுரம் சிற்பி திரு.அரவிந்தன் அவர்கள் தலைமையிலே உருவாக்கப் பட்டது. மாதிரி கல்வெட்டில் எழுத்துக்களின் சுமார் 30 அடி தூரத்திலிருந்து படிக்குமளவிற்கு உருவாக்கப்பட்டிருக்கின்றன.

அளவு: எழுத்தின் நீளம் 3 அங்குலம், அகலம் 3 அங்குலம், ஆழம் 1 அங்குலம்

## திருக்குறள் கல்வெட்டுக்கள் மாநாடு


Hindusthan Educ


கோவை மாநாட்டில் வேளாண்பல்கலைக்கழகத்
துணைவேந்தர் அவர்கள் குத்துவிளக்கேற்றும்போது
அருகில் குறள் மலைச்சங்கத் தலைவர் திரு பா.ரவிக்குமார்,
திரு வி.ஜி.சந்தோசம் அவர்கள்.

திருக்குறள் கல்வெட்டுக்கள் மாநாடு கோவையில் இந்துஸ்தான் கல்லூரியில் நடைபெற்றது. இதில் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு.செ.இராசு அவர்கள்வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு.ராமசாமி அவர்கள்சிந்தனைப் பேரவைத் தலைவர் திரு ஸ்டாலின் குணசேகரன் அவர்கள்திரு.வி.ஜி.சந்தோசம் அவர்கள் சிந்தனைக் கவிஞர் திரு.கவிதாசன் அவர்கள்குறள்செல்வி தேச.மங்கையற்கரசி அவர்கள்மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஞானகௌரி அவர்கள்கே.எம்.சி.எச் நிறுவனர் டாக்டர் நல்லா.ஜி.பழனிச்சாமி அவர்கள்கோவை மாநாட்டில் பேரூர் ஆதீனம்இளையபட்டம் மருதாசல அடிகளார் அவர்கள்சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள் அவர்கள்இந்துஸ்தான் கல்வி நிறுவன தாளாளர் திருமதி.சரஸ்வதி அவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

”கல்வெட்டில் திருக்குறள்”ஆய்வு நூல்




மாநாட்டில்  கல்வெட்டில் திருக்குறள் என்ற ஆய்வு நூல் வெளியிடப்பட்டது. கல்வெட்டு ஆராய்ச்சியளர் திரு செ.இராசு அவர்கள், சந்திராயன் திட்ட இயக்குநர் திரு. மயில்சாமி அண்ணாதுரைஅவர்கள், லண்டனைச் சேர்ந்ததிரு.புதுயுகன்அவர்கள், திரு.சிற்பி பால சுப்ரமணியம், உள்ளிட்ட பலரும் கட்டுரைகள் எழுதி நூலைச்சிறப்பித்திருந்தார்கள்.

கல்வெட்டுக்கள் ஆய்வுப் பணிகளுக்காக கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு.செ.ராசு அவர்களுடன் எமது குறள் மலைச்சங்கம் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக தீவீரமாக ஆலோசனை நடத்தி வருகிறது. திரு.செ.இராசு அவர்களின் ஆலோசனைகளும், அறிவுறுத்தல்களும் குறள் மலையை உருவாக்க எமக்குப் பேருதவியாக அமைந்துள்ளது.

பொதுவாக கல்வெட்டுக்களின் மூலமே நமது முன்னோர்களைப் பற்றியும், முன்னோர்களின் வாழ்க்கைமுறை பற்றியும் நன்கு அறிய முடிகிறது.கொங்கு தேசத்தில் பல கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன.கொங்கு

தேசம் என்பது தற்போது கோயமுத்தூர், ஈரோடு, கரூர், சேலம்,நாமக்கல் ஆகிய மாவட்டங்களைக் குறிக்கும்.

'தமிழ்மண்டிலம்ஐந்து' என்றுதிருமந்திரமும், 'வியன்தமிழ்நாடுஐந்து' என்றுதண்டியலங்காரப்பழையமேற்கோள்பாடலும்கூறுகின்றன.இதனால் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, தொண்டைநாட்டுடன் கொங்குநாட்டையும் சேர்த்துத்தமிழ்நாடு ஐந்து என்ற வழக்கம் முன்பு இருந்தது என அறிகின்றோம். பிறகாலச் செப்பேடுகளும், கல்வெட்டுகளும் தொடர்ந்து தமிழ்நாடுஐந்து என்று பல இடங்களில் தொகுத்துக் கூறுகின்றன.

கொங்குநாடு தமிழ்நாட்டின் பிறபகுதிகளைப் போலவே – அவற்றிற்கும் மேலாகவே திருக்குறளையும் திருவள்ளுவரையும் நினைவுகூர்ந்துள்ளது. திருக்குறள் ஏட்டுப்பிரதிகளை எழுதிக்காத்துள்ளது. உரைபல கண்டுள்ளது, நாட்டுப்பகுதிகட்கும், ஆட்களுக்கும் திருவள்ளுவர் பெயரைவைத்துள்ளனர். திருக்குறளைக் கல்வெட்டில் பொறித்துள்ளனர், அவற்றிற்கும் மேலாகக்கொங்குநாட்டுக் குறுநிலமன்னர்கள் தாங்கள் திருக்குறள்நெறிப்படி ஆட்சிபுரிந்தோம் என்று கூறி மகிழ்ந்துள்ளனர். நாள்தோறும் செய்யும் செயல்களுக்கும் திருக்குறள் சுவடியைப் பயன்படுத்தியுள்ளனர். இதனை வரலாற்று ஆவணங்களும், இலக்கியங்களும், ஏடுகளும் கூறுகின்றன.

*கொங்கு தேசத்தில் குறள் பற்றி திரு.செ.ராசு அவர்கள்*

கொங்கு தேசத்தில் அமைந்துள்ள குறள் கல்வெட்டுகள் பற்றி கல்வெட்டு ஆராய்ச்சியாளரும்,தஞ்சைத் தமிழ் பல்கலைக் கழகத்தின் மேனாள் தொல்லியல் துறைத் தலைவருமான திரு செ.இராசு அவர்கள் கீழ்காணும் வகையில் குறிப்பிடுகிறார். குறள்வழிஆட்சி கொங்குநாட்டுக்குறுநிலமன்னர்கள்மெய்க்கீர்த்திகளில்குறள்வழிஅவர்கள் ஆட்சிபுரிந்தமைபலஇடங்களில்கூறப்பட்டுள்ளன.

1) பூந்துறைநாட்டார்மேலோலை
'அழும்குழவிக்குஅன்புடைத்தாய்போல்
அனைத்துயிர்கட்கும்இனிமையேநல்கி
வள்ளுவர்உரைத்தமுப்பால்மொழியின்படியே
செங்கோல்நீதிவழுவாமல்நாட்டி
நடத்திவருகுறநாளில்'

2) காரையூர்ச்செப்பேடு
'இன்சொல்லால்இனிதளித்து
வனசொல்லால்மறம்கடிந்து
வள்ளுவர்உரைத்தமுப்பால்மொழியின்படியே
அறமேஅறிந்துஅல்லவைகடிந்து
ஆறில்ஒன்றுகடமைகொண்டு'

3) பல்லடம்செப்பேடு
'ஓதிஉணர்ந்துஉலகம்முழுதாண்டு
நீதிசாகரம்நினைவுடன்கற்று
மும்மொழிவிநோதன்முத்தமிழ்தெரிந்தோன்
வள்ளுவர்மரபுகாத்துமுப்பால்மொழியின்படியே
அல்லவைகடிந்துநல்லவைநாட்டி'

4) பழனிவீரமுடியாளர்செப்பேடு
'இன்சொல்லால்இனிதளித்துவள்ளுவர்மரபுகாத்து
முப்பால்மொழியின்படிக்கு
அல்லவைகடிந்துநல்லவைநாட்டி
கலிமெலியக்குடிதழைக்க
ஆறிலொன்றுகடமைகொண்டு
அசையாமணிகட்டிஅரசாளும்நாளில்'

என்பனகொங்குநாட்டுஓலைச்சுவடி, செப்பேட்டுத்தொடர்களாகும்.

ஆனூரில்அமைந்தபள்ளி

பழையகோட்டைப்பட்டக்காரரில்ஒருவர் 200 ஆண்டுகட்குமுன்புதிருவாவடுதுறைஆதீனம்சென்றுமுத்துப்பிள்ளைஎன்பவரைக்குடும்பத்துடன்கூட்டிக்கொண்டுவந்துபழையகோட்டைஅருகேஆனூரில்ஒருபள்ளிக்கூடம்ஏற்படுத்தினார்.
அதைப்பற்றிநீண்டபாடல்ஒன்றுஓலைச்சுவடியில்உள்ளது (முத்துப்பிள்ளையைஅளித்தமைக்காகப்பழையகோட்டைப்பட்டக்காரர்திருவாவடுதுறைஆதீனத்துக்கு 28 ஏக்கர்நிலம்கொடையாகஅளித்தார். அப்பகுதி 'தம்பிரான்வலசு'
எனஇன்றும்அழைக்கப்படுகிறது. 'எங்கணும்புகழவேகாரைஆனூர்வந்தபின்
எட்டுநாட்குஉள்ளாகவே

இருநூறுசிறுவர்கட்குஆனபடியாகஒரு
எழிலானகூறையிட்டு
பொங்கிடும்சமையல்அறைபள்ளியறைஇவைகளும்
புனிதஆசிரியருக்காய்
புதிதாகஅமைத்தவர்க்குஉணவுஉடைஇவைகளும்
போதியபடிக்களித்து
சங்கிதப்பண்ணுடன்சொலுகின்றதமிழ்மறை
சங்கநூல்கள்நிகண்டும்
சாதிமதபேதமில்லாதுநலநீதியாய்
சகலர்க்கும்ஓதிவைத்து
துங்கிதச்சொல்லுடன்தூயவர்இவராலே
துலங்குநற்பள்ளியீது'
என்பதுஇப்பள்ளியைக்குறிக்கும்பாடல்பகுதியாகும்.

இப்பாடலின்கீழ் தமிழ்மறையென்றதுவள்ளுவன்திருக்குறளை'
என்றுஎழுதப்பட்டுள்ளது.

திருக்குறள்கல்வெட்டு

நாமக்கல்மாவட்டம்பொன்சொரிமலையில்உள்ளசமணக்குகையின்மேல்புற
ம்கி.பி.13-14
ஆம்நூற்றாண்டுஎழுத்தமைதியில் 'தன்னூன்பெருக்கற்குத்தான்பிறிதூனுண்
பான்
எங்ஙனமாளுமருள்'

என்றதிருக்குறள்வெட்டப்பட்டுள்ளது (திருக்குறளைச்சமணர் 'எம்ஒத்து'
என்றுஉரிமைகொண்டாடுவர் - நீலகேசிமொக்கலவாதச்சருக்கம்
60,87ஆம்பாட்டின்உரை).

திருவள்ளுவர்

நாமக்கல்மாவட்டம்கபிலக்குறிச்சியில்உள்ளகபிலமலையில்இருந்தஒருஆ
தீனத்தலைவர்பெயர் 'திருவள்ளுவர்' என்பதாகும்.
(மத்தியத்தொல்லியல்துறைகல்வெட்டுஆண்டறிக்கை, ஆண்டு 1929, எண். 18)

வள்ளுவநாடு

கோயமுத்தூரின்வடமேற்கேயுள்ளஒருபகுதிக்கு 'வள்ளுவநாடு' என்றுபெயர்.இப்பெயர்கல்வெட்டில்காணப்படுகிறது.

திருக்குறள்ஏடுகள்

தருமபுரம்ஆதீனம்வெளியிட்ட 'திருக்குறள்உரைவளம்' நூலுக்குப்பரிதி, பரிப்பெருமாள், மல்லர், காலிங்கர்ஆகியோர்உரைஎழுதியஓலைச்சுவடிகளைஅளித்தபெரும்சிறப்பு முன்னாள்தமிழகப்புலவர்குழுஉறுப்பினர், அறிவனாரின்சங்ககாலஇசைநூலான 'பஞ்சமரபு' தேடிக்கண்டவர், அமரர்பெரும்புலவர்வே.ரா.தெய்வசிகாமணிக்கவுண்டர்அவர்களையேசாரும். மொத்தம் 50 ஏடுகளைத்தந்தார் (அமரர்வே.ரா.தெய்வசிகாமணிக்கவுண்டர்இக்கட்டுரையாளரின்ஆசிரியர்).அவ்வுரைகள்திருப்பனந்தாள்காசிமடம்வெளியிட்டதிருக்குறள்உரைக்கொத்திலும்அச்சாகியுள்ளது.

கல்விஒழுக்கம்கூறும்ஆதி

அவ்வையார்அருளிச்செய்த 'கல்விஒழுக்கம்' என்னும்நூல்கொங்குநாட்டுக்கேயுரியது.அதன்தொடக்கமே 'அஞ்சுவயதில் ஆதியைஓது
ஆதியைஓதஅறிவுண்டாமே'
என்று தொடங்குகிறது.இதுமுதற்குறள்கூறும் 'ஆதிபகவன்' தாக்கம் எனலாம்.


அரியபரிதியார்ஏடு

அண்மையில்சேலத்திலும், ஈரோட்டிலும்இரண்டுதிருக்குறள்ஏடுகள்பரிதியார்உரையுடன்கிடைத்துள்ளன. ஈரோட்டுஓலைச்சுவடியில்ஒவ்வொருஅதிகாரத்தலைப்பில் 'உத்தமம்' 'மத்திமம்' 'அதமம்' 'உத்தமத்தில்மத்திமம்' போன்றவற்றில்ஏதேனும்ஒன்றுஎழுதப்பட்டுள்ளது. திருவள்ளுவரைநினைந்துகயிறுபோட்டுசுவடியைத்திறந்துசெய்யத்தொடங்கும்செயல்களின்பயன்களைஅறியலாம்.'உத்தமம்' என்றுள்ளஏட்டின்பக்கம்வந்தால்நல்லது, 'அதமம்' என்றுவந்தால்செயலில்ஈடுபடக்கூடாது.வாழ்க்கைநெறிநூல்திருக்குறளை அன்றாடவாழ்வில்கொங்குமக்கள்பயன்படுத்தியுள்ளனர்என்கிறார் செ.ராசு

அவர்கள். இவ்வாறாக பழங்காலம் முதலே நம் முன்னோர்கள் குறள் காத்து, குறள் நெறி போற்றி வந்துள்ளனர். மேலும் சங்கம் வளர்த்த மதுரையில் மீனாட்சி அம்மன் ஆலய தெப்பக்குளத்தின் படிக்கட்டுகளிலும், சென்னை திருவல்லிக்கேனியில் உள்ள ஒரு கிணற்றிலும் குறள்களுக்கான கல்வெட்டுக்களைக்காண முடிகிறது. ஆனால் இந்தக் கல்வெட்டுக்கள் அனைத்துமே தனித்தனிக் கற்களில் சுமார் 2 மில்லிமீட்டர் ஆழத்திற்கும் குறைவாகவே அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது குறள் கல்வெட்டுக்கள் ஒரே பாறையினாலான பெரிய மலையில், எழுத்துக்கள் ஒவ்வொன்றும் சுமார் ஒரு அங்குல ஆழத்தில் அமைக்கப்படவுள்ளது. குறள் மலை உருவாக்கப்பட்ட பின் திருக்குறள் ஆராய்ச்சிக் கூடம் நிறுவியும், விழா மண்டபங்களை உருவாக்கியும், வருடத்தின் 365 நாட்களிலும் தொடர்ந்து திருக்குறள் விழாக்கள் தமிழ் விழாக்கள் இங்கு நடத்தப்படவேண்டும்.

## குறள் மலை இறுதிவடிவம்




குறள்கள் கல்வெட்டுக்களாக பொறிக்கப்பட்டபின் மலையின் தோற்றம்

ஈரோடு மாவட்டம் கோபி வட்டம் மலையப்பாளையத்திலுள்ள மலை இதற்குப் பொருத்தமான மலை என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த மலை சுமார் 20 ஏக்கர் பரப்பளவு கொண்ட, ஒரே பாறையாளான மலையாகும். 1330 குறளையும் உரிய விளக்கங்களுடன் பதிக்க சுமார் ஏழு ஏக்கர் பரப்பளவே போதுமானது. மீதமுள்ள இடத்தை, நடைபாதை, சிறுவர் விளையாட்டுத்திடல், கார் பைக் பார்க்கிங் போன்ற பயன்பாடுகளுக்காக திட்டமிட்டுள்ளோம். ஈரோடு மாவட்ட ஆட்சியரும் தமிழ் வளர்ச்சித்துறை

அதிகாரிகளும் இந்த மலையை ஆய்வு செய்து முடித்துவிட்டார்கள். முதல் குறளை மலையிலே பதித்து 3.7.2016 அன்று திறப்புவிழா நடத்தப்பட்டது. இஸ்ரோ இயக்குநர் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை அவர்களும் நீதியரசர் திரு.மகாதேவன் அவர்களும் முதல்குறளைத் திறந்துவைத்து சிறப்புரையாற்றினார்கள்.

# ஒரு குறளின் நீளம் 16 அடி ; அகலம் 5 அடி எழுத்தின் ஆழம் 12 எம்எம்




அறத்துப்பால்
கடவுள் வாழ்த்து
அதிகாரம் 1
குறள்
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு
விளக்கம்
எழுத்துக்களுக்கு முதன்மையானது அ
அதுபோல் உலகுக்கு முதன்மையானவன் இறைவன்
As a letter A is the first of all letters,
the eternal God is the first in this world


முதல் குறள்
நாள்: 03.07.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00
இடம்: குறள்மலை மலையப்பாளையம், ஈரோடு மாவட்டம்
முன்னிலை
வி.ஜி.சந்தோசம் அவர்கள், சென்னை



தொடர்ந்து பணிகள் நடைபெற்று வருகின்றன.அடுத்த ஒன்பது குறள்களை பதிப்பதற்கான அளவீடுகள் ( marking ) செய்யப்பட்டுவிட்டன. அதற்கான நுண்கருவிகள் ( tools ) ஜெர்மெனி நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டுவிட்டன. ஒரு குறளை உரிய விளக்கங்களுடன் மலையிலே பதிப்பதற்கு நான்கு இலட்ச ரூபாய் செலவு ஆகிறது. திருக்குறளைக் கல்லிலே பதிப்பது ஒரு மிகச்சிறந்த கல்விப்பணியும்கூட என்று சான்றோர்கள் ( சரவணம்பட்டி முனைவர் குமரகுருபர சுவாமிகளும், பேரூர் ஆதீனம் தவத்திரு இராமசாமி அடிகளாரும், திரு.சிற்பி பாலசுப்ரமணியம் அவர்களும், விஞ்ஞானி திரு.மயில்சாமி அண்ணாதுரை அவர்களும், திரு.வி.ஜி.சந்தோசம் அவர்களும் ) கூறுகிறார்கள். முழுத்தொகையும் கிடைக்கப்பெற்றதும், சுமார் 25 ( இருபத்தைந்தே ) மாதங்களில் அனைத்து குறள்களையும் மலையிலே பதித்துவிடமுடியும். பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இதையே

பாடமாகக்கொண்டு மனதிலே ஆழமாகப் பதித்து அனைத்தையும் ஒருங்கிணைத்து பணியாற்றி வருவதால் இது சாத்தியமாகிறது.

அரசிடம் எமது கோரிக்கைகள் : 1. 1330 திருக்குறளையும் உரிய விளக்கங்களுடன் மலையிலே கல்வெட்டிலே பதித்து குறள்மலை உருவாக்கப்படவேண்டும்
2.அந்தக் கல்வெட்டு அமைந்த குறள்மலையின் அடிவாரத்தில் வருடத்தின் 365 நாட்களிலும் தமிழ் விழாக்கள் நடத்தப்படவேண்டும். அதற்கான கட்டிடங்கள் தங்கும் விடுதி உணவுக்கூடம் அமைக்கப்படவேண்டும்.
3. தமிழ்நாட்டிலிருந்து ஒளிபரப்பாகும் செய்தித் தொலைக்காட்சிகளில், உலகச்செய்திகள், விளையாட்டுச்செய்திகள் ஒளிபரப்புவதைப் போல் தமிழ்ச்செய்திகள் என்ற தலைப்பில் அரை மணி நேரத்திற்கொருமுறை தமிழ்வளர்ச்சிச் செய்திகள் ஒளிபரப்பப்பட வேண்டும்.

இதில் முதல் கோரிக்கையை மட்டும் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

## மேலதிக விபரங்களுக்கு www.thirukkuralmalai.org

## thirukkuralkalvettukkal.blogspot.in

## You tube links

| | | |
|---|---|---|
| **Location** | : | http://www.youtube.com/watch?v=z2BiGLx1bu8 |
| **Presentation** | : | http://www.youtube.com/watch?v=rCntWhwJn5o |
| **Stalin gunesekaran** | : | http://www.youtube.com/watch?v=YvGb6GAz-Vk |
| **S.K.M** | : | http://www.youtube.com/watch?v=CGng2-wvf0k |
| **Appavu** | : | http://www.youtube.com/watch?v=Sp2WgJSrYms |
| **Collector** | : | http://www.youtube.com/watch?v=jLhq8uagCA4 |
| **Kavidasan** | : | http://www.youtube.com/watch?v=AE211DzdlYI |
| **Raw rock** | | http://youtu.be/s3P5UbEfITc |
| **Collector video** | : | http://youtu.be/SqwCtv0VMdA |